Ubin Tides

乌敏岛
ISSUE 10
Nov 2022 - Apr 2023
PULAU UBIN

# கோலின் கோவுடன் நேர்காணல்

உபின் நண்பர்கள் கட்டமைப்பின் (FUN) உறுப்பினராக, இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வெளிப்புறப் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கும் உபின் தீவில் சமூக ஈடுபாட்டுக்கும் கோலின் கோ பங்களிக்கிறார். விளையாட்டின்மீதும் தீவின்மீதும் அவர் கொண்டிருக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்க எது அவரைக் தூண்டுகிறது என்பதை நாங்கள் கண்டறிந்தோம்.



பிரதான கிராமத்தில் கோலின். இவர் சிங்கப்பூர் தோணிப்படகு கூட்டமைப்பின் உறுப்பினரும்கூட! (புகைப்பட உதவி: கிரெக் ஒ’லூக்லின்)

**உபின் தீவில் பாதுகாப்பான விளையாட்டுகளை ஊக்குவிக்க எது உங்கள் ஆர்வத்தைத் தூண்டியது?**
எனக்கு எப்போதுமே உட்புற, வெளிப்புற வீரதீர விளையாட்டுகள்மீது ஆர்வம் அதிகம். ஆனால், நான் வெளிப்புற விளையாட்டுகளையே அதிகமாக விரும்புகிறேன். தென்கிழக்கு ஆசியாவின் ஈரப்பதமான சூழலுக்கு, நீர் விளையாட்டுகளே சிறந்ததாகத் தெரிகின்றன.

விளையாட்டுத் துறையில் எனக்குள்ள ஆர்வம் சிங்கப்பூரில்தான் தொடங்கியது. நான் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வசித்தபோது, வெளிநாடுகளில் அதிக அனுபவம் பெற்றேன். அந்த ஆண்டுகளில், விளையாட்டுகளை நடத்துபவர்களிடையே பாதுகாப்பு குறித்த மனப்பான்மையில் குறிப்பிடத்தக்க அளவிலான வேறுபாடுகள் இருப்பதை நான் கவனித்தேன். நான் குறிப்பாகக் கவனித்தது என்னவெனில், சொல்லப்பட்டதற்கும் விளையாட்டை நடத்துபவரின் உண்மையான தயார்நிலை அல்லது அதில் நிலவிய பற்றாக்குறை ஆகியவற்றுக்கும் தொடர்பே இல்லாமல் இருந்ததைத்தான்.

நான் சிங்கப்பூருக்குத் திரும்பியபோது, நான் கவனித்திருந்த சில நல்ல பாதுகாப்பு நடைமுறைகளை இங்கே கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானித்தேன்.

**கடந்த ஆண்டுகளில் உபின் தீவில் நீங்கள் எத்தகைய மாற்றங்களைக் கவனித்தீர்கள்? அடுத்த பத்து ஆண்டுகளில் உபின் தீவில் நீங்கள் எதைக் காண விரும்புகிறீர்கள்?**
நான் 1980-களின் மத்தியில் உபின் தீவின் தஞ்சோங் தாஜாமில் ஒரு முக்குளிப்புப் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினேன். கடந்துவந்த ஆண்டுகளில், உபினில் பல முன்னேற்றங்களை நான் பார்த்திருக்கிறேன்.

உபின் தீவு கிராமிய சமூகத்தின் வாழ்விடமாக இருந்து, பின்னர் இயற்கைக்கும் கட்டமைக்கப்பட்ட பயன்பாட்டிற்குமான இடமாக மாறி, இப்போது நம் நாட்டு மரபுடைமையின் ஒரு முக்கியமான இடமாக உருமாறி, படிப்படியான மாற்றத்தை அடைந்திருக்கிறது.

பொருளாதார மதிப்பின் உயர்வான நிலைகளான படைப்பாற்றல், கருத்தியல், கண்டுபிடிப்பு ஆகியவற்றை நோக்கி நமது கவனத்தை நாம் திருப்புகின்ற நேரத்தில், பிரதமர் லீ சியன் லூங் மக்களை ஒரு புதிய சிந்திக்கும் வழிமுறைக்குக் கொண்டு வருவதற்கான முக்கிய மையமாக உபினை முன்பு அடையாளம் கண்டிருந்தார். இது அனேகமாக “உபின் வழி” (FUN கட்டமைப்பால் உருவாக்கப்பட்ட சொல்) என்ற சொற்களில் வேரூன்றியுள்ளது. இயல்பாகச் சிந்திப்பதும் (அதாவது, அனைவரையும் சென்றடைகிற, நீடித்த நிலைத்தன்மையுடைய விதத்தில்), செயற்கையாகச் சிந்திப்பதைக் குறைத்துக் கொள்வதுமே இதன் பொருள் என நான் கருதுகிறேன். இந்தச் சிந்தனை, 30 நவம்பர் 2014 அன்று நடைபெற்ற நமது முதல் உபின் நாளில், பிரதமர் லீயால் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

**உபின் திட்டத்தின் தொலைநோக்கு குறித்து, சிங்கப்பூரின் எதிர்காலத் தலைமுறையினரிடம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**
ஓர் இயற்கை அடைக்கலமாக அல்லது சாகச விளையாட்டு மைதானமாக இருப்பதையெல்லாம் தாண்டி, சிங்கப்பூருக்கு மிகவும் முக்கியமான ஓர் இடமாகத் திகழ்கிறது உபின். இது நம் நாட்டின் மரபுடைமை, அடையாளம், உணர்வு ஆகியவற்றின் சரணாலயமாகும். உபின் நம் மக்களின் மனச்சாட்சிக்கான சோதனைக்கூடமாக இன்றுவரை நீடித்திருப்பதைப்போல, இனியும் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்று நான் சொல்வேன். அதோடு, குழப்பங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் உலகில், அதன் பரிணாம வளர்ச்சியை ஆதரிக்கக்கூடிய பற்றுமிக்க ஒரு செயற்குழுவும் தொடர்ந்து இருக்கவேண்டும்.

எளிமையாகச் சொல்வதென்றால், எனது தாழ்மையான கருத்தின்படி, சிங்கப்பூர் ஒரு கப்பல் என்றால், உபின் அதன் நங்கூரம்.



கோலின் (முன் வரிசையில், வலமிருந்து இரண்டாமவர்) சக FUN உறுப்பினர்கள் மற்றும் பெஸ்டா உபின் தொண்டூழியர்களுடன், 19 ஆகஸ்ட் 2022 அன்று அமைச்சர் டெஸ்மண்ட் லீ கலந்துகொண்ட பாராட்டு விருந்தில்

உபின் வழியைப் பற்றி மேலும் அறிய, கீழே உள்ள விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்:

# நம் நண்பர்களின் சிறு உதவியுடன்

**கொவிட்-19 இரண்டாவது கூடுதல் தடுப்பூசி போடும் பணி**



ஒன்றுகூடும் பகுதியில் தடுப்பூசி நிலையம்

கொவிட்-19 கிருமியிலிருந்து பாதுகாப்பதற்காக, 50 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு இரண்டாவது கூடுதல் தடுப்பூசி போடப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்தபோது, முந்தைய தடுப்பூசி போடும் பணிகளில் நல்ல அனுபவத்தைக் கண்டிருந்த கிராம மக்கள், தங்களுக்கான தடுப்பூசிகளைத் தீவிலேயே பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தனர். நான்காவது முறையாக, தேசிய பூங்காக் கழக (NParks) சமூகத் தொடர்புக் குழு, சுகாதார அமைச்சுடன் இணைந்து இல்லத் தடுப்பூசிக் குழுவை உபின் தீவுக்கு மீண்டும் கொண்டு வந்தது. 23 செப்டம்பர் 2022 அன்று, இல்லத் தடுப்பூசிக் குழுவினர், 23 கிராம மக்களுக்கு தடுப்பூசி போட்டனர். அவர்களில் சிலரை அவர்களின் வீடுகளுக்கே சென்று சந்தித்தனர். கிராம மக்கள் தங்களுக்கான தடுப்பூசிகளை வசதியாக உபினிலேயே போட்டுக்கொள்வதில் கிராம மக்கள் மீண்டும் மகிழ்ச்சியடைந்தனர்.



கிராமவாசியின் வீட்டில் நடமாடும் தடுப்பூசிப் பணி






தேசிய பூங்காக் கழகமும் சுகாதார அமைச்சின் இல்லத் தடுப்பூசிக் குழு நண்பர்களும்

**குட்ஸ்டாக்@ஆர்.பி**
ரிபப்ளிக் பலதுறைத் தொழிற்கல்லூரியைச் (ஆர்.பி) சேர்ந்த ஊழியர்களும் மாணவர்களும் குட்ஸ்டாக் நிகழ்ச்சியை மூன்றாவது முறையாக மீண்டும் உபினுக்குக் கொண்டு வந்தனர்! தேசிய பூங்காக் கழகத்துடன் இணைந்து, ஆர்.பி ஏற்பாடு செய்துள்ள குட்ஸ்டாக்@ ஆர்.பி, சுகாதார நடவடிக்கைகள்மூலம் உபின் கிராம மக்கள் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க ஊக்குவிக்கிறது.



ஆர்.பி மாணவர்களும் கிராம மக்களும் உடற்பயிற்சி செய்வதற்குத் தயாராகிறார்கள்

19 நவம்பர் 2022 அன்று நடந்த இந்நிகழ்வில், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பற்றிய விவரங்களைக் கிராம மக்களுடன் மாணவர்கள் பகிர்ந்துகொண்டனர். இதன் வாயிலாக, ஆர்.பி குழுவினர் சேவை செய்யக் கற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. சிங்கப்பூரின் தேசிய உடற்குறையுள்ளோருக்கான ஒலிம்பிக் எடைதூக்கும் வீரரான அய்னி யாஸ்லியுடன் சேர்ந்து, ஆர்.பி குழுவினர் கிராம மக்களுக்கு சுகாதாரப் பராமரிப்புப் பைகளை விநியோகித்தனர். அதோடு, அவர்கள் வீட்டிலேயே செய்யக்கூடிய எளிய இழுவைப்பட்டை பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தனர். கிராமவாசிகளுக்கு, தீவின் அன்றாட வழக்கத்திலிருந்து மாறுபட்ட ஒரு நல்ல நிகழ்வாக இது அமைந்தது. அங்கத்தின் முடிவில், பங்கேற்றோர் அனைவரும் புதிய விவரங்களைத் தெரிந்துகொண்டு, அதிக புத்துணர்ச்சியுடன் கிளம்பிச் சென்றார்கள்!



கிராமத்தினர் தங்களது இழுப்புப்பட்டைகளை வலுவுடன் இழுக்கிறார்கள்



நிகழ்வு முடிந்தபின் தேசிய பூங்காக் கழகமும் ஆர்.பி நண்பர்களும்

NATIONAL PARKS
LET'S MAKE SINGAPORE OUR CITY IN NATURE

FRIENDS OF UBIN NETWORK

Share your love for nature and animals at
#NParksBuzz #AnimalBuzzSG

# நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகள் வெற்றிகரமாகக் கூடுகட்டின

உபின் திட்டத்தின்கீழ் தேசிய பூங்காக் கழகம் மேற்கொண்ட இனமீட்பு முயற்சிகளின் பலனாக, நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகள் உபின் தீவில் வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்வதைக் காண்கிறோம்.



நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவியின் பளபளக்கும் வண்ணங்கள்.

1990-களின் பிற்பகுதிக்கு முன்னதாக, அப்போது செயல்பாட்டில் இருந்த கெத்தாம் கற்சுரங்கமே (முன்னாள் ஐக் ஹுவா கற்சுரங்கம்) நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகளின் (மெரோப்ஸ் விரிடிஸ்) வாழ்விடமாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில், இந்த வசிப்பிடப் பறவைகள் கற்சுரங்க நடவடிக்கைகளின் வாயிலாகத் திரண்டிருந்த கருங்கல் தூசுக் குவியல்களில் கூடு கட்டுவது வழக்கம். ஆனால், 1999-ஆம் ஆண்டில் உபின் தீவில் கல்லுடைப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட பின்னர், நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகளுக்குக் கூடு கட்டும் இடங்களாகப் பயன்பட்ட கருங்கல் தூசிக் குவியல்கள் மறைந்துபோயின. சிங்கப்பூரின் மற்ற பகுதிகளில், செங்குத்தான பாறை முகப்புகள், குழிப்பந்து திடல்கள், கடற்கரைக்கு அருகிலுள்ள மணல் புல்திட்டுகள் ஆகியவற்றில் பஞ்சுருட்டான் குருவிகள் கூடு கட்டுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



1990-களின் பிற்பகுதியில் ஐக் ஹுவா கற்சுரங்கம்



கெத்தாம் கற்சுரங்கத்தில் கெத்தாம் பறவை இனங்களின் இனமீட்புத் தளம்

2016-ஆம் ஆண்டு முதல், மூன்று பறவை இனங்களின் இனமீட்புக்காக, கெத்தாம் கற்சுரங்கத்தின் காட்சிமாடத்துக்கு அருகிலுள்ள ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது: சிவப்பு மூக்கு ஆள்காட்டிப் பறவை (வனெல்லஸ் இண்டிகஸ்), தூக்கணாங்குருவி (பிளோசியஸ் பிலிப்பினஸ்) மற்றும் நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவி. நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகள் கூடு கட்டி வாழ எப்படிப்பட்ட இடத்தை விரும்புகின்றன என்பதைக் கண்டறிய வெவ்வேறு பொருள்களின் கலவைகளைக் கொண்ட ஏழு மேடுகள் கட்டப்பட்டன. தரையில் கூடு கட்டி வாழும் பறவையான சிவப்பு மூக்கு ஆள்காட்டிப் பறவைக்காக, திறந்தவெளிக் கற்பகுதிகளும் புல்வெளிகளும் இடத்தின் வடிவமைப்பில் சேர்க்கப்பட்டன. மரக்கிளைகளிலிருந்து தொங்கும் கூடுகளைக் கட்டும் தூக்கணாங்குருவிகளுக்கு இடமளிக்கும் வகையில் தொங்கும் மரக்கிளைகள் கொண்ட மரங்கள் நடப்பட்டன.







(மேல் இடமிருந்து கடிகார திசையில்) தேசிய பூங்காக் கழகத்தின் பல்வேறு கண்காணிப்பு முனைப்புகள்

தேசிய பூங்காக் கழகம் புகைப்படக்கருவிகளையும் தொலைநோக்கிகளையும் கொண்டு ஆண்டுதோறும் கண்காணிப்பு நடத்துகிறது. 2021-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வழக்கமான ஒரு கண்காணிப்பின்போது, நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிகள் மேடுகளில் கூடு கட்டியிருப்பதை தேசிய பூங்காக் கழகக் குழு கவனித்தது! அவை கருங்கல் தூசி மற்றும் மணல் மேடுகளை விரும்புவது கண்டறியப்பட்டது.

பறவைகள் தங்களது வருடாந்தர இடம்பெயர்வை முடித்துத் திரும்பிய பின்னர், மார்ச் மாதத்தில் இனச்சேர்க்கையையும் சுரங்கம் தோண்டுதலையும் தொடங்குகின்றன. அவற்றின் இனப்பெருக்கக் காலம் ஜூலை வரை நீடிக்கும். பறவைகள் அடிக்கடி அவற்றின் கூடுகளுக்குள் திரும்பவும் நுழைவதைக் காணும்போது, அவற்றைக் கூர்ந்து கவனிப்பதற்காக உள்நோக்குக் கருவியும் புகைப்படக்கருவியும் பொருத்தப்படுகின்றன. பறவைகள் சுமார் 1 மீட்டர் ஆழமும் 6 செண்டிமீட்டர் அகலமும் கொண்ட நீளமான சுரங்கங்களை மேடுகளில் தோண்டியது கண்டறியப்பட்டது. சுரங்கத்தின் முடிவில் உள்ள ஒரு சிறிய துளையில் முட்டைகள் இடப்படுகின்றன. குஞ்சு பொரித்தவுடன், அவை அந்தத் துளைக்குள்ளேயே தங்கியிருக்கும். ஆனால், அவை வளர்ந்து பசியெடுக்கும்போது, படிப்படியாக சுரங்கத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நகர்கின்றன.



சிறகு முளைக்கும் தருவாயில் அதன் துளைக்கூட்டுக்குள் இருக்கும் நீலத்தொண்டை பஞ்சுருட்டான் குருவிக்குஞ்சு

2022-ஆம் ஆண்டு நிலவரப்படி, வேட்டையாடப்படுதல் மற்றும் சுரங்கம் இடிந்து விழுதல் ஆகியவை நேர்ந்தபோதிலும், 11 கூடுகளில் குருவிக்குஞ்சுகளுக்குச் சிறகு முளைத்து கூடுகளைவிட்டு வெளியே பறந்து சென்றதாகப் பதிவாகியுள்ளது! அடுத்த இனப்பெருக்கக் காலத்திலும் இந்தக் கண்காணிப்பு தொடரும். அதிலிருந்து, இந்த அற்புதமான பறவைகளைப் பற்றி நாம் மேலும் அறிந்துகொள்ளலாம் என நம்புகிறோம்.